

காமராசர் நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டிடப் பணிகளை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு செய்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொலி வாயிலாக திருச்சிராப்பள்ளி டி.வி.எஸ் டோல்கேட் அருகில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு (21.03.2025) அடிக்கல் நாட்டினர். அதனைத் தொடர்ந்து மிக விரைவாக நடைபெற்று வரும் கட்டிடப் பணிகளை ஒவ்வொரு கட்டமாக தொடர்ந்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். திருச்சிராப்பள்ளி, டி.வி எஸ் டோல்கேட் பகுதியில் ரூபாய் 290 கோடி மதிப்பீட்டில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைய உள்ளது. நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் கட்டிட பொறியாளர்கள், அரசு உயர் அதிகாரிகள், வல்லுனர்கள் உடன் இருந்தனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் தொகுதி அனுமந்தம்பட்டி பேரூர் பொருளாளர் ஆசீர் இல்ல விழாவில் ஜேக்கப் பவானி மணமக்களை தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன், மாநில தீர்மான குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார், தேர்தல்பணி குழு செயலாளர் செல்வேந்திரன், ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி, அனுமந்தம்பட்டி பேரூர் செயலாளர் ராஜ்குமார், தேனி நகர மன்ற தலைவர் ரேணுகா பாலமுருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டத்தை நிறைவேற்றக் காரணமாயிருந்த

# பெருந்தலைவர் காமராசர் - வி.கே.பழனிசாமி கவுண்டர் - சி.சுப்பிரமணியம் - பொள்ளாச்சி நா.மகாலிங்கத்திற்கு திருவுருவச் சிலையுடன் நினைவு அரங்கம்!

## பணிகளை – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

பொள்ளாச்சி, ஜூலை 10 -

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, நீர்வளத்துறையின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் பரம்பிகுளம் ஆழியாறு திட்டத்தினை நிறைவேற்றக் காரணமாகயிருந்த பெருந்தலைவர் கு. காமராஜர் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே. பழனிச்சாமி கவுண்டர். முன்னாள் மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஆகியோர்களுக்கு திருவுருவச் சிலையுடன் நினைவு அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேற்று முன்தினம் (08.07.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது பொள்ளாச்சி நாடாளு மன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், பொள்ளாச்சி நகர்மன்ற தலைவர் திருமதி.சியாமளா நவநிதிகிருஷ்ணன்; பொதுப்பணித் துறை (கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) செயற்பொறியாளர் செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது:-

மிகப்பெரிய பாசனத் திட்டங்களில் ஒன்றான பரம்பிக்குளம் ஆழியார்பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டபோது பொறுப்பில் இருந்த தலைவர்களான அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் , ஒன்றிய முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே.பழனிச்சாமி கவுண்டர் , பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோருக்கு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவுருவச்சிலை யும், அரங்கமும், கட்டப்பட்டு வருகின்றன.

இந்த அரங்கத்தின் கீழ்தளம் விவசாயிகள் கருத்தரங்குகள் நடத்துவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேல்தளத்தில் ஆழியாறு பாசன திட்டம் குறித்து இளைய சமூகத்தினர், விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தற்கான மதிப்பீடு ரூ.4.28 கோடி ஆகும். ஆழியாறு பாசனத் திட்டம் மிக முக்கியமான திட்ட மாகும். இப்பகுதி மக்களின் உயிர்நாடியாக இருக்கின்றது. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்று ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகள் விரைந்து முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

மேலும், இத்திட்டம் உருவாக காரணமாக இருந்த இவர்கள் அனைவரையுடைய திருவுருவச் சிலை களும் அமைக்கப்பட்டு, ஆழியார் தினத்தன்று அன்னார்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்த அரசாணை வெளியிடப்ப ட்டுள்ளது.

மேலும், அதே நாளில் ஏற்கனவே வால்பாறையில் அமைக்கப்பட்டுள்ள ராவ் அவர்களின் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படும். மேலும், பி.ஏ.பி. கால்வாய் திட்டத்தி ன்போது உயிரிழந்தவர்களுக்கான மணிமண்டமும் கட்டப்பட்டு வருகின்றது. இந்த மணிமண்டபம் அமைக்கும் பணிகளும் விரை வில் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இவ்வாறு த அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

முதல்வரின் செயலாளர் எம்.எஸ்.சண்முகம் ஐ.ஏ.எஸ். தாயார்

# திருமதி எம்.எஸ்.ராஜலட்சுமி அம்மையார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 9-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செயலாளர் எம்.எஸ்.சண்முகம் ஐ.ஏ.எஸ். அவர்களின் தாயார் திருமதி எம்.எஸ். ராஜலட்சுமி அம்மாள் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

என்னுடைய செயலாளராக உள்ள சண்முகம் ஐ.ஏ.எஸ் அவர்களின் தாயார் திருமதி எம்.எஸ். ராஜலட்சுமி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

பெற்ற அன்னையின் மறைவு என்பது ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அத்தகைய பேரன்பை இழந்து தேற்ற முடியாத துயரில் வாடும் சண்முகம் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், உறவினார்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.





ஒடுங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தின் மூத்த அரசியல்வாதியும், மொழிப்போர்த் தியாகியும், தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர், கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் இணைந்து இயக்கத்தில் பணியாற்றியவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.சி. கோவிந்தசாமி அவர்கள் இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று கழக இருவண்ண கொடி போர்த்தி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். அப்போது உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# இளையான்குடியில் பாக முகவர்கள் கூட்டம்!

## திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 10 -

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியம்,பேரூர் கழகத்தின் சார்பில் பி .எல்.ஏ 2. ,பி.டி.ஏ .பாகமுகவர்கள் கூட்டம் முன்னாள் எம்.எல்.ஏ. வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சுப. மதியரசன் தலைமையில் பேரூர் கழகச் செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் பி.ஏ., நஜ்மூதீன் முன்னிலையில் நடைபெற்றது .

இந்த கூட்டத்தில் மானாமதுரை தொகுதிசட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரை ஒருங்கிணைப்பாளர் எஸ். ஆர். வினோத் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் .

இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் த.உதயகுமார் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் ராஜா, மோகன்ராஜ், கண்ணன், மணிமொழியான் , விவசாய அணி பா.காளிமுத்து முன்னாள் கூட்டுறவுசங்கத் தலை வர் சுப.தமிழரசன் நிர்வாகிகள் பெரியசாமி, இளைஞரணி பைரோஸ் கான், பேரூராட்சி மன்ற துணை தலைவர் இப்ராஹிம், ஜெயினுலாபுதீன், இப்ராஹீம் ஷா, சிவநேசன், ராஜேந்திரன், மற்றும் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

# பொன்னேரி பாகமுகவர்கள் கூட்டம்!

திருவள்ளூர், ஜூலை 10-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி தொகுதிகுட்பட்ட பி.எல்.ஏ 2 பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் பொன்னேரியில் நடைபெற்றது.

இதில் கழக துணை பொது செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ. இராசா எம்.பி, சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் பல்வேறு ஆலோசனை வழங்கினார்கள் அப்போது ஆ.இராசா எம்பி பேசுகையில் இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

# வேப்பனபள்ளி கிழக்கு, வேப்பனபள்ளி மேற்கு - ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு - சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் – தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த “தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு” ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், வேப்பனபள்ளி கிழக்கு, வேப்பனபள்ளி மேற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்பட்டும் – ஓசூர் ஒன்றியம் ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு ஆகிய 3 ஒன்றியங்களாகவும் - சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு ஆகிய 3 ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட வேப்பனபள்ளி கிழக்கு, வேப்பனபள்ளி மேற்கு – ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு – சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு ஆகிய ஒன்றியங்கள், பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகஅமையும்.

வேப்பனபள்ளி கிழக்கு ஒன்றியம் : 1. சிகரமாகனப்பள்ளி, 2.வேப்பனபள்ளி, 3. நாடுவனப்பள்ளி, 4. மாரசந்திரம், 5. மாதேப்பள்ளி, 6. பில்லனகுப்பம், 7. கோடிப்பள்ளி, 8. சாமந்தமலை, 9. குந்தாரப்பள்ளி, 10. சின்னமனவாரனப்பள்ளி, 11. நாரலப்பள்ளி, 12. பெரியகோட்டப்பள்ளி, 13. எம். சி. பள்ளி ஆகிய 13 ஊராட்சிகள்.

**வேப்பனபள்ளி மேற்கு ஒன்றியம் :** 1. பதிமடுகு, 2. பாலனப்பள்ளி, 3.அலேகுந்தாணி, 4. தீர்த்தம், 5. குரியனப்பள்ளி, 6. ஐப்பிகானப்பள்ளி, 7. நேரலகிரி, 8. மனவாரனப்பள்ளி, 9. தம்மாண்டரப்பள்ளி, 10.சிந்தகும்மனப்பள்ளி, 11. சென்னசந்திரம், 12. குப்பாச்சிபாறை, 13.பீமாண்டப்பள்ளி ஆகிய 13 ஊராட்சிகள்.

**ஓசூர் வடக்கு ஒன்றியம் :** 1. நல்லூர், 2. பேகேப்பள்ளி, 3.சேவகானப்பள்ளி, 4. ஈச்சங்கூர், 5. பாகலூர், 6. பெலத்தூர், 7.தும்மனப்பள்ளி, 8. படுதேப்பள்ளி, 9. நந்திமங்கலம், 10. முத்தாலி, 11.சென்னசந்திரம், 12. கௌவரப்பள்ளி ஆகிய 12 ஊராட்சிகள்.

**ஓசூர் தெற்கு ஒன்றியம் :** 1. தொரப்பள்ளி அக்ரஹாரம், 2.ஒன்னல்வாடி, 3. அச்செட்டிபள்ளி, 4. கொத்தகொண்டப்பள்ளி, 5. பூனப்பள்ளி, 6.நாகொண்டப்பள்ளி, 7. கோபனப்பள்ளி, 8. எஸ். முதுகானப்பள்ளி, 9.முகலூர், 10. மாசிநாயகனப்பள்ளி ஆகிய 10 ஊராட்சிகள்.

**ஓசூர் கிழக்கு ஒன்றியம் :** 1. பேரண்டப்பள்ளி, 2. ஆலூர், 3.பி.குருபரப்பள்ளி, 4. பி.எஸ்.திம்மசந்திரம், 5. காட்டிநாயகன்தொட்டி, 6. பேரிகை, 7. பலவனப்பள்ளி, 8. கொளதாசபுரம், 9. பாலிகானப்பள்ளி, 10. அலசப்பள்ளி - பட்வரப்பள்ளி ஆகிய 10 ஊராட்சிகள்.

**சூளகிரி வடக்கு ஒன்றியம் :** 1. புக்கசாகரம், 2. வெங்கடேசபுரம், 3.அத்திமுகம், 4. பன்னப்பள்ளி, 5. கும்பளம், 6. பெத்தசிகரலப்பள்ளி, 7.நெரிகம், 8. சின்னாரன்தொட்டி, 9. காமன்தொட்டி, 10. கானலட்டி, 11.தோரிப்பள்ளி, 12. அங்கொண்டப்பள்ளி, 13. எ. செட்டிப்பள்ளி, 14.செம்பரசனப்பள்ளி ஆகிய 14 ஊராட்சிகள்.

**சூளகிரி தெற்கு ஒன்றியம் :** 1. சூளகிரி, 2. மாரண்டப்பள்ளி, 3.சிம்பல்திரடி, 4. காளிங்கவரம், 5. பஸ்தலப்பள்ளி, 6. சென்னப்பள்ளி, 7. இம்மிடிநாயகனப்பள்ளி, 8. மேலுமலை, 9. தியாகரசனப்பள்ளி, 10.மாரண்டப்பள்ளி ஆகிய 10 ஊராட்சிகள்.

**சூளகிரி கிழக்கு ஒன்றியம் :** 1. பங்கனப்பள்ளி, 2. அயர்னப்பள்ளி, 3.உல்லட்டி, 4. உத்தனப்பள்ளி, 5. கொம்மேபள்ளி, 6. சானமாவு, 7.துப்புகானப்பள்ளி, 8. பீர்ஜேப்பள்ளி, 9. ஒசஹள்ளி, 10. சாமனப்பள்ளி, 11. கோனேரிப்பள்ளி, 12. ஏனுசோனை ஆகிய 12 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற வேப்பனபள்ளி கிழக்கு, **வேப்பனபள்ளி மேற்கு – ஓசூர் வடக்கு, ஓசூர் தெற்கு, ஓசூர் கிழக்கு – சூளகிரி வடக்கு, சூளகிரி தெற்கு, சூளகிரி கிழக்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**வேப்பனபள்ளி கிழக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : டி.எஸ்.கருணாகரன்,** வேப்பனபள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**வேப்பனபள்ளி மேற்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : ஏ.எம். ரகுநாத்,** வேப்பனபள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**ஓசூர் வடக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : ஆர். கஜேந்திரமூர்த்தி,** ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

**ஓசூர் தெற்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : என். ராமமூர்த்தி,** ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

**ஓசூர் கிழக்கு ஒன்றியம் :** பொறுப்பாளர் : ஆர். லோகேஷ், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

**சூளகிரி வடக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : கே. நாகேஷ்,** சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**சூளகிரி தெற்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : கே.சி. பாக்கியராஜ்,** சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**சூளகிரி கிழக்கு ஒன்றியம் : பொறுப்பாளர் : எம். முனிவெங்கடசாமி (எ) அப்பையா** சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 08.07.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை மூலமாக கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பில் விராலிமலை மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சு.சிவக்குமார் அவர்களின் மருத்துவ அறுவை சிகிச்சை செலவுக்காக ரூபாய் 5 லட்சத்துக்கான காசோலையை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் முன்னிலையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் தாட்கோ தலைவர் என்.இளையராஜா வழங்கினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், ஒன்றிய கழக செயலாளர்கள் அ.இளங்குமரன், கே.பி.ஐயப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், விளாப்பட்டி சிவா, நூ.அன்சாரி பாசித், தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா , தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எழில் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.